## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## M.C.O.P.No.89/2024

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | வனத்தயன் |
| தகப்பனார் / கணவர் | .. | ஜோசப் |
| வயது | .. | 42 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | இருங்கல் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1, செய்யாறு, அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் ம.த.சா.ஆ.2, மனுதாரரின் ஆதார அட்டை நகல் ம.த.சா.ஆ.3, விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் ம.த.சா.ஆ.4, குற்ற வழக்கின் இறுதி அறிக்கை நகல் ம.த.சா.ஆ.5, விபத்து ஏற்படுத்திய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.த.சா.ஆ.6, விபத்து ஏற்படுத்திய TN 73 AX 9331 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஆர்.சி புத்தகம் நகல் ம.த.சா.ஆ.7, விபத்து ஏற்படுத்திய TN 73 AX 9331 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் இன்சுரன்ஸ் பாலிசி நகல் ம.த.சா.ஆ.8 ஆகும்.

**குறுக்கு விசாரணை:**

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**